வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, நவம்பர் - 2017
## Term Examination, November - 2017

| கிறிஸ்தவம் I | தரம் :- 13 (2018) | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

### பகுதி I

❖ மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை விடைத்தாளில் புள்ளடி இடுக.

01. பபிலோனியப் பின்னணி காணப்படும் மரபு.
1) J மரபு 2) R மரபு 3) D மரபு
4) P மரபு 5) M மரபு

02. இஸ்ரேயலர் இறைமக்களாக உருவாகப்படல் இடம் பெற்றது.
1) பாலை நிலத்தில் இறை பராமரிப்பைப் பெற்ற பின்னர்.
2) வாக்குப் பண்ணப்பட்ட பிரதேசத்தை உரிமையாக்கிக் கொண்ட பின்னர்.
3) அரசர்களின் ஆட்சிக் காலத்தில்.
4) நீதித் தலைவர்களின் வழிநடத்தலின் போது
5) சீனாய் உடன்படிக்கையின் மூலம்.

03. மீக்கா இறைவாக்கினரின் மெசியா பற்றிய எண்ணக் கருவாக காணப்படுவது.
1) அனைத்துலகையும் ஆளும் அரசர்
2) இதோ நாட்கள் வருகின்றன.
3) இதோ இளம் பெண் ஓர் ஆண் மகனைப் பெற்றெடுப்பார்
4) வியத்தகு ஆலோசனையாளர்.
5) கழுதைக் குட்டியாகிய மறியின் மேல் ஏறி வருகிறார்.

04. போற்றுவதற்குரிய கடவுளின் மகனாகிய மெசியா நீர் தானா?
1) பிலாத்து 2) ஏரோது 3) தலைமைக்குரு 4) அன்னா 5) கய்பா

05. இறைவன் மனிதனைப் படைத்ததின் காரணம்.
1) தனது திறமைகளை காட்டுவதற்கு 2) படைப்பை ஆண்டு நடத்துவதற்கு
3) சமூகத்தில் மனிதராக வாழ்வதற்கு 4) நவீன உலகை உருவாக்க
5) சுயநலமாக செயற்பட

06. பாலைவனப் பயணத்தில் இஸ்ரேயல் மக்களுக்கு தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்ட இடம்?
1) சீன் பாலைவனம் 2) சுக்கோத்து 3) ஒரேப் மலை 4) இரபிதிம் 5) யாம் சுப்

07. மத்தேயு நற்செய்தியாளரின் கூற்றுக்களில் மிகவும் சரியானது.
A – மலைப் பொழிவு இறையரசின் சாசனம் எனப்படும்.
B – மலைப்பொழிவில் இயேசு புதிய மோசேயாக சித்தரிக்கப்படுகின்றார்.
C – மலைப்பொழிவில் நான்கு பேறுகள் காணப்படுகின்றன.
1) B 2) A யும் B யும் 3) C 4) A யும் C யும் 5) B யும் C யும்

08. தென்னரசில் இறைவாக்கு உரைத்த இறை வாக்கினர்கள்.
1) ஏசாயா, எரேமியா, ஆமோஸ் 2) ஏசாயா, எரேமியா, எசேக்கியேல்
3) ஒசேயா, ஏசாயா, மீக்கா 4) ஆமோஸ், ஒசேயா, எசேக்கியேல்
5) ஏசாயா, எரேமியா, மீக்கா

09. திருத்தூதர் பவுல், திருத்தூதர் பேதுருவைப் போல் சிலுவையில் அறையப்படாமல் சிரச்சேதம் செய்யப்பட்டமைக்கான காரணம்.
1) அவர் யூதக்குடிமகனாக இருந்தமை.
2) உரோம சட்டத்தில் சிலுவையில் அறையப்படுதல் தொடர்பான சட்டம் நீக்கப்பட்டமை.
3) அவர் ஒரு உரோமக் குடிமகனாக இருந்தமை.
4) அவர் ஒரு நற்செய்திப் பணியாளனாக இருந்தமை.
5) உரோமையில் இறைபணியாற்றியமை.

10. ஒனேசிம் என்ற அடிமையை கிறிஸ்துவில் தனது சொந்த சகோதரனாக ஏற்றுக் கொள்ளுமாறு திருத்தூதர் பவுல் யாருக்கு திருமடல் எழுதினார்?
1) பிலமோன் 2) பர்னபா 3) மாற்கு 4) தீமொத்தேயு 5) பேதுரு

11. "…….. என்னை ஆசீர்வதித்து விட்டு விரைவாகப் போங்கள்" என்ற கூற்று பார்வோனினால் எந்தத் துன்பத்தின் போது கூறப்பட்டது.
1) கொப்புளங்கள் 2) தவளைகள் பெருக்கம் 3) கல்மழை
4) காரிருள் 5) தலைச்சன் பிள்ளைகள் கொல்லப்படுதல்.

12. அமைதியை ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் …….
1) கடவுளின் மக்கள் எனப்படுவர் 2) கடவுளைக் காண்பர் 3) இரக்கம் பெறுவர்
4) நிறைவு பெறுவர் 5) ஆறுதல் பெறுவர்

13. "தெய்வங்கள் மனித உருவில் நம்மிடம் இறங்கி வந்திருக்கின்றன" என மக்கள் கூறியது.
1) யுத்திகு எனு இளைஞனை உயிர்ப்பித்தமை.
2) லிஸ்திராவில் கால் வழங்காத ஒருவரை குணமாக்கியமை.
3) புப்பிலியுவின் தந்தையைக் குணமாக்கியமை.
4) தீய ஆவியை துரத்தியமை.
5) லிதியாவை மனமாற்றியமை.

14. A :- பாஸ்கா செம்மறியின் "எந்த எலும்பும் முறிவு படாது"
B :- "தாங்கள் ஊடுருவக் குத்தியவரை உற்று நோக்குவார்கள்"
யோவான் நற்செய்தியாளர் மேற்கூறப்பட்ட இரண்டு பழைய ஏற்பாட்டு இறைவாக்குகளும் நிறைவேறியதாக கூறப்படும் நபர்.
1) ஸ்தேவான் 2) பேதுரு 3) பவுல் 4) இயேசு 5) யாக்கோபு

15. "புற இனத்தாருக்கும் அரசருக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் நற்செய்தியை அறிவிக்க இறைவனால் தெரிந்து கொள்ளப்பட்ட கருவி" என அனனியாவுக்கு அறிவிக்கப்பட்டவர்.
1) யோவான் 2) தோமா 3) பவுல் 4) ஸ்தேவான் 5) பேதுரு

16. கணவன் - மனைவியின் கடமைகள் குறித்து புனித பவுல் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ள இரு மடல்கள்.
A – உரோமைய மடல் B – கொரிந்தியர் மடல் C – எபேசிய மடல்
D – கொலோசையர் மடல் E – தெசலோனிக்கேயர் மடல்
1) BC 2) AB 3) AD 4) CD 5) BE

17. இறையரசின் பெறுமதியை அறிந்து கொண்ட பின்னர் தமக்குரிய யாவற்றையும் துறந்து அதனைப் பெற்றுக் கொள்ளுதல் பற்றிக் கூறப்படும் உவமை.
1) புதையல், கடுகுவிதை 2) முத்து, கடுகுவிதை 3) முத்து, பெருவிருந்து
4) புதையல், முத்து 5) கடுகுவிதை, பெருவிருந்து

18. புனித யோவான் நற்செய்தியில் மட்டும் குறிப்பிடப்படும் இயேசுவுடன் தொடர்புடைய இரு முக்கிய நிகழ்வுகள்.
1) சீடர்களின் தெரிவும் பரமண்டல செபம்.
2) சீடர்களின் பாதங்கழுவுதல் இயேசுவின் விலாவில் ஈட்டியால் குத்துதல்
3) விண்ணேற்றம், இறுதி இராவுணவு.
4) கெத்சமனே தோட்டத்தில் செபித்தல், பரமண்டல செபம்.
5) இயேசுவின் உடல் அடக்கம், இயேசுவின் உயிர்ப்பு.

19. A – யாவே உயர்த்துகிறார்.
B – யாவே மீட்பாயிருக்கிறார்.
C - இறைவன் பலப்படுத்துகிறார்.
D – தூய்மையற்ற உதடுகளைக் கொண்ட மனிதன் நான்.
E - இதோ பார் என் சொற்களை உன் வாயில் வைத்துள்ளேன்.
F - இறைசெய்தி சுருளேட்டை உண்ணக் கொடுத்தல்.
மேலே குறிப்பிட்டுள்ளவற்றில் இறைவாக்கினர் ஏசாயாவுடன் தொடர்புடையவை.
1) AE 2) BF 3) AF 4) BE 5) AD

20. எசேக்கியேல் இறைவாக்கினருடன் தொடர்புடைய கூற்று.
1) AD 2) CE 3) CF 4) BF 5) BD

21. மக்கள் அரசனாக்க முயற்சித்த போது "ஆண்வரே உங்களை ஆளட்டும்" என மறுத்த நீதித்தலைவர்.
1) தெபோரா 2) கிதியோன் 3) ஒத்தானியேல் 4) இப்தா 5) அபிமெலேக்

22. எருசலேம் நகரம் ஆலயம் கட்டியெழுப்பப்பட்டு யூத மதத்தை புனரமைப்பு செய்வதில் முக்கிய பங்காற்றியவர்கள்.
1) சைரஸ், அலெக்சாண்டர் 2) எப்பிபான், யோண் கீர்கானுஸ் 3) நீரோ, கல்பே
4) எஸ்திரா, நெகேமியா 5) நேர்வா, திராஜன்

23. கத்தோலிக்க வேதாகமத்திற்கும் புரட்டஸ்தாந்து வேதாகமத்திற்குமிடையே வேறுபாட்டை உண்டாக்கும் நூற்பிரிவு.
1) இணைத்திருமறை நூல்கள் 2) வரலாற்று நூல்கள் 3) இறைவாக்கினர் நூல்கள்
4) இலக்கியங்கள் 5) நீதிச்சட்டங்கள்

➢ **24 – 26 வரையான வினாக்களுக்கு கீழ்வரும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.**

A – எபேசு B – பிசிதியா அந்தியோக்கியா C – தெசலோனிக்கா
D – கொரிந்து E - இக்கோனியா

24. பவுல் நற்செய்தியை யூதர்களுக்கு முதலில் அறிவித்த போதிலும் அவர்கள் ஏற்றுக் கொள்ளாத காரணத்தினால் புற இனத்தவருக்கு அறிவிப்பதாக கூறும் இடங்கள்.
1) AB 2) AD 3) BD 4) CE 5) BC

25. "அஞ்சாதே பேசிக்கொண்டே இரு நிறுத்தாதே ஏனெனில் நான் உன்னோடு இருக்கிறேன்." எனப் ஆண்டவர் பவுலுக்கு வாக்களித்த இடம்.
1) A 2) C 3) D 4) B 5) E

26. …………………… "திரன்னு" மன்றத்தில் பவுல் நாள்தோறும் விவாதித்தார்.
1) C 2) E 3) B 4) A 5) D

27. கவிஞர்களால் எழுதப்பட்டதாகக் கூறப்படும் பாரம்பரியம்.
1) எலோகிம் 2) யாவே 3) குரு 4) உபாகமம் 5) யாவே, குரு

28. ,நம்பிக்கையால் மட்டுமே ஒருவர் மீட்படைய முடியும்' எனும் கூற்றுடன் பொருத்தமுடையவர்.
1) சுவிங்ளி 2) கல்வின் 3) மாட்டின் லூதர் 4) கென்றி 5) வெஸ்லி

29. "எந்தவொரு திருவருட்சாதனமும் அருட்கொடைகளை வழங்குவதில்லை. அவை வெறும் அடையாளங்களை மட்டுமே" எனக் கூறியவர்.
1) சுவிங்ளி 2) வெஸ்லி 3) கல்வின் 4) மாட்டின் லூதர் 5) கென்றி

30. துறவற மடங்களின் உதவியோடு பதினொராம் நூற்றாண்டில் திருச்சபையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய திருத்தந்தை
1) 4ம் ஹென்றி 2) 3ம் ஊர்பன் 3) திருத்தந்தை 22ம் அருளப்பர்
4) 1வது நிக்கிலாஸ் 5) 7வது கிரகோரியார்

31. மரியா இறைவனின் தாய் என்ற எபேசு பொதுச் சங்கத்தின் தீர்மானத்தை நிலை நிறுத்த அயராது உழைத்தவர்.
1) புனித அகஸ்டின் 2) புனித ஜெறோம் 3) புனித ஓரிஜின்
4) புனித சிறில் 5) புனித அத்தனாசியார்

32. ஆவியைக் குறிக்க பவுல் பயன்படுத்தும் கிரேக்க சொல்.
1) நெயூமா 2) காரிஸ் 3) பரூசியா 4) லோகேஸ் 5) எஸ்மா

33. பெந்தக் கோஸ்து நாளில் இடம் பெற்ற முக்கிய நிகழ்வு அல்லாதது.
1) பிளவுபட்ட நாவடிவில் தூய ஆவி சீடர்கள் மீது இறங்கியது.
2) அனைத்து மக்களுமே அயல் மொழிகளில பேசினர்.
3) பல மொழிகளில் பேசினர்.
4) வீடு முழுவதும் தூய ஆவியின் பிரசன்னம் நிரப்பப்பட்டமை.
5) பலத்த காற்று வீசியது போன்ற இரைச்சல்.

34. இயேசுவே ஆண்டவர் என அறிக்கையிடுவதற்கு ஆற்றல் அளிப்பவர்.
1) இறைவன் 2) இயேசு 3) சீடர்கள்
4) திருச்சபைத் தந்தையர் 5) தூய ஆவி

35. இஸ்ரயேல் மக்கள் சீனாய் உடன்படிக்கைக்கு ஆயத்தமான விதம்.
1) ஆடைகளைத் கழுவித் தூய்மைப்படுத்தல்.
2) மலையின் அடிவாரத்தில் இருத்தல்.
3) மோசேயுடன் தனித்திருத்தல்.
4) உள்ளார்ந்த வெளியார்ந்த விதத்தில் தூய்மையாதல்.
5) பெண் உதவிலிருந்து விலகியிருத்தல்.

36. எருசலேம் சங்கத்தினால் ஏற்பட்ட முக்கிய நன்மை.
1) கிறிஸ்தவம் யூத மறையிலிருந்து விலகுதல்.
2) திருமுழுக்கை திருச்சபை ஏற்றுக் கொள்ளல்.
3) பிற இனத்தவருக்கு திருச்சபையின் கதவுகள் திறக்கப்படல்
4) தலைமைத்துவம் உறுதிப்படுத்தப்படல்.
5) மறை பிரச்சாரத்திற்கு வழியேற்படல்.

37. எகிப்தில் ஏற்பட்ட துன்பங்களினால் வெளிப்படுவது.
1) பார்வோன் திறமையான அரசன்.
2) மோசே வல்லமையான தலைவன்.
3) இவை இயற்கையின் நிகழ்வு.
4) மக்களின் பாவ நிலை.
5) யாவே ஆண்டவர் வல்லமை மிக்கவர்.

38. கிரேக்க மொழியில் „சினகொக்' எனும் சொல்லுக்குரிய பொருள்.
1) அகபே 2) செபக்கூடம் 3) செமியேன் 4) இறைபுகழ் 5) வேதப்படிப்பு

39. சிலுவையில் அறைப்படுவதற்கு தீர்ப்பிடும் அதிகாரம் இருப்பது.
1) கிரேக்கப் பேரரசு 2) தலைமைக் குரு 3) உரோமப் பேரரசு
4) எகிப்தியப் பேரரசு 5) பாரசீகப் பேரரசு

40. இறைவாக்கினர் எபிரேய மொழியில் அழைக்கப்படுவது.
1) நபி 2) குரு 3) ரபி 4) கலிபா 5) போதகர்

41. உண்மையான இறைவாக்கினரை இனங் காண்பதற்கான அளவு கோல்களில் இடம் பெறாத அளவீடு.
1) சாபங்கள் நிறைவேற்றுதல். 2) சோதிடம் குறி சொல்லுதல் தவிர்த்தல்.
3) நேர்மையான செயற்பாடு. 4) இறை கட்டளைக்கு கீழ்ப்படிதல்.
5) கடவுளால் அழைக்கப்படுதல்.

42. ஆபிரகாமின் குணாதிசயம் அல்லாதது,
1) கீழ்ப்படிவு 2) பணிவு 3) விசுவாசம் 4) தியாகம் 5) சுயநலம்

43. பெலிஸ்திய சம வெளிக்கும் யூதேயா மலைப்பகுதிக்கும் இடையில் ……………… சமவெளி உண்டு.
1) செப்பேலா 2) எஸ்திரலோன் சமவெளி 3) சாரோன் சமவெளி
4) பலஸ்தீனா மலைத்தொடர் 5) பெலிஸ்திய சமவெளி

44. சட்ட வல்லுநரும் குருவுமாகிய எஸ்ராவுக்கு ……………… எனும் புகழ் கிடைத்தது.
1) விசுவாசத்தின் தந்தை 2) யூதர்களின் அரசர் 3) யூதேயா மக்களின் தந்தை
4) அனைத்து உலகிற்கும் உரியவர் 5) ஆசீர்வதிக்கப்பட்டவர்.

45. தந்தையிடமிருந்து மகனுக்கு ஆட்சி அதிகாரம் வழங்கப்படும் பரம்பரை முறையை உருவாக்கியவர்.
1) தாவீது 2) சவுல் 3) ஜெரோபெயாம் 4) ஆகாப் 5) மோசே

46. மாட்டின் லூதர் கத்தோலிக்க திருச்சபையை குறை கூற ஏதுவாக அமைந்த பிரதான காரணம்.
1) திருச்சபையின் சுகபோக வாழ்வு.
2) திருச்சபையில் அரசியல் மயம்.
3) பிரபுக்கள் குலத்தினருக்கு விசேட சலுகைகள்.
4) பரிபூரணபலன் அல்லது பாவமன்னிப்பு விடுதலைப் பத்திரம் விற்றமை.
5) திருவிவிலிய ஒழுக்க வாழ்வு வாழாமை.

47. ஒரு குருவாகவும் மக்கள் தலைவராகவும் பணியாற்றியவர்.
1) மோசே 2) சிம்சோன் 3) சாமுவேல் 4) தாவீது 5) கிதியோன்

48. தாவீதின் நகரம் என்று அழைக்கப்படுவது.
1) சாமாரியா 2) எருசலேம் 3) கலிலேயா 4) சிக்கேம் 5) தர்சு

49. பாரசீகப் பேரரசின் மன்னரும் இஸ்ரயேல் மக்களின் விடிவெள்ளியுமாகக் கருதப்பட்டவர்.
1) நெபுக்காத்னேசர் 2) தீத்துஸ் 3) எப்பிப்பானஸ்
4) யூலியசீசர் 5) சைரஸ்

50. பேதுரு யோப்பாவில் செய்த புதுமை.
1) முடக்கு வாத முற்றவரை குணப்படுத்தல்.
2) பேய்களை ஓட்டியவர்.
3) குருடனை குணமாக்குதல்.
4) தபித்தாவை உயிர்ப்பித்தல்.
5) புப்பிலியுவை குணப்படுத்தல்.

FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, நவம்பர்- 2017
## Term Examination, November - 2017

| கிறிஸ்தவம் II | தரம் :- 13 (2018) | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

### பகுதி II

➢ **பகுதி 'அ' இல் இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி 'ஆ' இல் இருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

### பகுதி – அ

01. i. யோவான் நற்செய்தியில் உயிர்த்தெழுந்த இயேசுவின் தரிசனங்கள் இடம் பெற்ற நான்கு சந்தர்ப்பங்கள் தருக?
    ii. மாற்கு நற்செய்தியின் சிறப்புப் பண்புகள் நான்கு தருக?
    iii. யூத வழிபாட்டில் காணப்படும் முக்கிய திருவிழாக்கள் எவை? அவற்றில் ஒன்றை சுருக்கமாகத் தருக?
    iv. ஆதித் திருச்சபையின் மதவாழ்வின் நான்கு முக்கிய சிறப்புப் பண்புகள் எவை?
    v. திருச்சபையின் சிறப்புப் பண்புகளாகக் காணப்படும் நான்கு இலட்சணங்கள் எவை?
    (4x5=20 புள்ளிகள்)

02. i. திருத்தொண்டர் பிலிப்பு சமாரியாவில் ஆற்றிய பணிகள் நான்கு தருக?
    ii. தூய ஆவியின் வல்லமையைப் பெற்ற திருத்தூதர்களிடம் ஏற்பட்ட மாற்றங்கள் நான்கு தருக?
    iii. எருசலேம் பொதும் சங்கத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் நான்கினைத் தருக?
    iv. தூய ஆவியானவரின் அருட் கொடையினுள் திருப்பணியுடன் தொடர்புடைய கொடைகள் நான்கு தருக?
    v. மலைப் பொழிவில் புதிய ஒழுக்கவியல் தொடர்பாக அயலவருடன் உறவு நிலை என்பதில் உள்ளடங்கும் நான்கு விடயங்கள் குறிப்பிடுக.(எதிர்மாற்று கருத்துக்கள்)
    (4x5=20 புள்ளிகள்)

03. i. கி.பி 325 – கி.பி 451 காலப்பகுதியில் நடைபெற்ற திருச்சபையின் முக்கிய பொதுச் சங்கங்கள் 4 தருக?
    ii. தூய பவுல் முதலாம் மறைத்தூதுப் பயணத்தில் தரிசித்த இடங்கள் எவை?
    iii. உயிர்த்தெழும் போதுள்ள உடலின் இயல்பு பற்றி புனித பவுல் கூறும் விடயங்கள் நான்கு தருக?
    iv. யோவான் நற்செய்தியில் காணப்படும் இறையியல் கருத்துக்கள் நான்கு தருக?
    v. மத்தேயு நற்செய்தியில் காணப்படும் எட்டுப் பேறுகளில் சகமனிதரோடு நாம் கொண்டிருக்க வேண்டிய உறவின் மனநிலையைக் குறிப்பிடும் பேறுகள் எத்தனை? அவற்றை எழுதுக?

## பகுதி – ஆ

04. i. தூய ஆவியின் வருகையுடன் திருச்சபையின் பிறப்பு இடம் பெற்ற விதத்தை பெந்தக்கோஸ்து நிகழ்வின் துணையுடன் ஐந்து விடயங்களினூடாக விளக்குக?

ii. திருச்சபையானது முதல் மூன்று நூற்றாண்டுகளிலும் துரிதமாக வளர்ச்சியடைய ஏதுவாய் அமைந்த காரணிகள் ஐந்தினை முன்வைத்து விளக்குக?

(2x10=20 புள்ளிகள்)

05. i. கிறிஸ்துவின் தலைமைத்துவம் (மேன்மை) பற்றி புனித பவுல் கொலோசைருக்கு எழுதிய திருமடலில் (1:15-20) எடுத்துக் கூறும் படிப்பினைகள் ஐந்தினைத் தந்து விளக்குக?

ii. புனித பவுல் கலாத்தியருக்கு எழுதிய தூய ஆவியின் கனிகள் பற்றிக் குறிப்பிடுகின்றார். அவற்றை எடுத்துக் கூறி விளக்குக?

(20x10=20 புள்ளிகள்)

06. i. புனித பவுல் இரண்டாம் மறைத்தூதுப் பயணத்தில் தரிசித்த முக்கிய இடங்களையும் அங்கு நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகளையும் விளக்குக?

ii. “மனிதன் சட்டத்தினால் அல்ல கிறிஸ்துவில் கொள்ளும் விசுவாசத்தினாலேயே இறைவனுக்கு ஏற்புடையவனாகின்றான்” என்பதை உரோமைய திருச்சபையினருக்கு பவுல் எடுத்துரைக்கும் படிபப்பினைகள் ஐந்தினைத் தந்து விளக்குக?

07. i. எட்டாம் நூற்றாண்டில் கிறிஸ்தவ திருச்சபையின் மறைபரப்பு பணி, கல்வித்துறை பற்றி விளக்குக?

ii. திருச்சபையின் முக்கிய பொதுச் சங்கங்கள் கூட்டப்படுவதற்கு காரணமாக இருந்த பேதகங்களைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றைப் பற்றி விளக்குக?

(2x10=20 புள்ளிகள்)

08. i. அனைத்துக் கொடைகளிலும் அன்பே சிறந்தது என்பதை புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து விளக்குக?

ii. மனித மாண்புகள் மதிக்கப்படாது அழிந்து போகும் இக்காலத்தில் பிறர் அன்பை வளர்க்க நாம் கடைப்பிடிக்க வேண்டிய முறைகளை ஆராய்க?

(2x10=20 புள்ளிகள்)

The National e-Learning Portal for the General Education